அ.வ எண் 20/2012 வெள்ளத்துரை (பிசா3) தேதி:09.10.2023

10ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் கோழிக்கடை வைத்து தொழில் செய்துவருகிறேன். இரண்டு நாட்களுக்கு முன்னால் என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு நகல் மற்றும் ஒப்புதல் அட்டை பிசாஆ.34 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சட்ட அறிவிப்பை நான் படித்து பார்த்தேன். மேற்படி அறிவிப்போடு இணைக்கப்பட்டுள்ள 07.03.2023 தேதியிட்ட கோட்டாட்சியரின் உத்தரவை நான் பாத்தேன். மேற்படி பிசாஆ.34 ஆவணத்தோடு இணைக்கப்பட்டுள்ள மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவை நான் படித்துப்பார்த்தேன். நான் தாக்கல் செய்துள்ள பிசாஆ.31 கோட்டாட்சியர் உத்தரவோடு நான் தாக்கல் செய்த மனுவின் நகலை உடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் மனு 01.03.2023ல் வட்டாட்சியர் கோவில்பட்டி, அவர்களுக்கு நான் கொடுத்த மனு நகல் ஆகும். மேற்படி ஆவணம் பிசாஆ.35 ஆகு குறியீடு செய்யப்படுகிறது. 01.03.2023 கோவில்பட்டி, வட்டாட்சியர் அலுவகத்தில் நான் கொடுத்த மனு எழுத்துபூர்வமான மனு என்றும் இணையதளம் மூலம் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் இணையதளம் மூலமாகவும் மனு கொடுத்தேன். 02.03.2023ம் தேதி மேற்படி கோவில்பட்டி, வட்டாட்சியர் நான் கொடுத்த மனுவின் அடிப்படையில் கோப்புகளை கோட்டாட்சியருக்கு அனுப்பி வைத்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கோடுத்த பிசாஆ.35 மனுவில் எனக்கு பட்டா வேண்டும் என்று தான் கேட்டுள்ளேன் என்றும் 10ம் பிரதிவாதிக்கு கொடுத்த 2198 பட்டாவை ரத்து செய்யக்கோரி கேட்கவில்லை எ ன்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த மனுவில் அசல் வழக்கு எண்.20/2012 மற்றும் 47/2015 வழக்குகள் நிலுவையில் இருப்பதாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். கடந்த ஜனவரி மாதம் முதல் நான் இந்த வழக்கின் ஒவ்வொரு விசாரணைக்கும் நீதிமன்றத்திற்கு வந்துகொண்டிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். அசல் வழக்கு எண்.20/2012 மற்றும் 47/2015 ஆகிய வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். அசல் வழக்கு எண். 47/2015 வழக்கின் வாதி மற்றும் அசல் வழக்கு எண்.20/2012 வழக்கின் 10ம் பிரதிவாதி மற்றும் மேலே சொன்ன 2 வழக்குகளிலும்

உள்ள மற்ற பிரதிவாதிகள் ஆகியோரை எதிர்மனுதாரர்களாக நான் கொடுத்த பிசாஆ.35 மனுவில் காட்டவில்லை என்று சொன்னால் சரிதான். முதல் விசாரணை சங்கதிகள் எனக்கு படித்துக்காண்பிக்கப்பட்டது. முதல் விசாரணையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் பிசாஆ.31 கோட்டாட்சியர் உத்தரவில் எதிர்மனுதாரர்கள் என்று யாரும் காட்டப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது 10ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டாவை இரத்து செய்ய கோரும் பொழுது எதற்கு மற்ற கட்சிகளை எதிர்மனுதாரராக காட்டவில்லை என்று சொன்னால் ஆவணங்களை சரிபார்த்து பட்டா வழங்கும்படி நான் கேட்டுக்கொண்டேன். பிசாஆ.31 உத்தரவில் பட்டா எண்.61 அய்யப்பநாயக்கர் பெயரில் பதிவு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பிசாஆ.32ல் காட்டப்பட்டுள்ள உத்தரவில் பாண்டவர்மங்கலம் கிராமம் புல எண்.511/2A மற்றும் 511/2B ஆகிய சொத்துக்களுக்கு பட்டா எண்.5355 என்னுடைய பெயரில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உத்தரவிற்கு பின்னிட்டு கோவில்பட்டி, வட்டாட்சியரிடம் எனது பெயருக்கு பட்டா வழங்கும்படி நான் மனு கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். கோவில்பட்டி வட்டாட்சியரிடம் நான் கொடுத்த மனு நகலை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பிவாசாஆ.31 உத்தரவின்படி எனது பெயரில் பட்டா வழங்க சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்படாத சூழ்நிலையில் நான் எனது பெயருக்கு பட்டா கேட்டு மனு கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி வட்டாட்சியருக்கு மனு கொடுத்து மேற்படி மனுவை கோட்டாட்சியருக்கு அனுப்பி கோட்டாட்சியரிடம் சாதகமான உத்தரவு பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் சம்பந்தமான வழக்குகள் நிலுவையில் இருக்கும் சங்கதிகளை மறைத்து மற்ற கட்சிகளை எதிர்மனுதாரர்களாக மனுவில் காட்டாமல் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி கோட்டாட்சியரிடம் உத்தரவு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு கிடைத்த பிசாஆ.34 சட்ட அறிவிப்பை நான் எனது வழக்கறிஞரிடம் காண்பித்தேன். பிசாஆ.34 சட்ட அறிவிப்போடு இணைத்து அனுப்பப்பட்ட WP No.21786/2023 மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின்படி கோட்டாட்சியரால் 07.03.2023 பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தடைசெய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்போடு

மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவு இணைத்து அனுப்பப்பட்டது என்றும் வழக்கிற்காக மேற்படி உத்தவு பற்றி தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிசாஆ.31 ஆவணம் ஜெராக்ஸ் ஆவணம் என்றும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. பிசாஆ.31 உத்தரவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளைப் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனவே மேற்படி ஆவணத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று தெரியாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு படிக்கத்தெரியாது. பிசாஆ.30 கிரைய ஆவணம் நான் 13ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற ஆவணம் என்று சொன்னால் சரிதான். நான் 15,00,000/—ரூபாய்க்கு கிரையம் பெற்றேன். மேற்படி எனது அப்பா தொழிலின் மூலம் கிடைத்த வருமானம் ஆகும். அதில் எனது சம்பாத்தியமும் சேர்ந்து இருந்தது. எனக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் 13ம் பிரதிவாதியை கிரைய ஆவண தேதிக்கு பிறகு எப்பொழுது பார்த்தேன் என்று கேட்டால் 1 மாதம் கழித்து பார்த்தேன். 13ம் பிரதிவாதி எப்பொழுது இறந்தார் என்று எனக்கு தெரியாது. பிசாஆ.31 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள RTR 3755/2011 என்ற உத்தரவானது இளையரசனேந்தல் கிராம கணக்கில் பதிவு செய்யப்பட்டுவிட்டதால் பாண்டவர்மங்களம் கிராம கணக்கில் பதிவரையில் ஒப்படைக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிசாஆ.30 கிரைய ஆவணத்திற்கு சரியான மதிப்பீடு செய்யப்படவில்லை என்று பிரிவு 47A பதிவு சட்டத்தின் கீழ் கிரைய ஆவணம் பிடித்துவைக்கப்பட்டது என்றால் சரிதான். பிரிவு 47A பதிவு சட்டத்தின் கீழ் கூடுதல் முத்திரைக்கட்டணம் நான் செலுத்தி பின்னிட்டு அசல் கிரைய ஆவணத்தை பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரிதான். கூடுதல் முத்திரைக்கட்டணம் செலுத்திய பிறகு 13ம் பிரதிவாதிக்கு கூடுதல் கிரையத்தொகை எதுவும் கொடுக்கவில்லை. கூடுதல் கிரையத்தொகை ரூ.34,61,140/— நான் 13ம் பிரதிவாதிக்கு செலுத்தவில்லை என்று சொன்னால் சரிதான். பின்னிட்டு 20.09.2011 தேதியில் அசல் ஆவணம் விடுவிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். நானும் எனக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் 13ம் பிரதிவாதியும் இணைந்து மோசடியாக பிசாஆ.30 கிரைய ஆவணத்தை தயார் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் 13ம் பிரதிவாதியிடம் நான் கிரையம் பெற்றிருந்தால் கூடுதல் கிரையத் தொகையை செலுத்தி அதற்கான பணப்பற்று இரசீது தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. 13ம் பிரதிவாதியிடமிருந்து கிரையத் தொகை சம்பந்தமாக

பணப்பற்று இரசீது தாக்கல் செய்யாத காரணத்தினால் எனது கிரையம் உண்மையான கிரையம் என்று சொன்னால் சரியல்ல. பிசாஆ.30 கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள அய்யப்பநாயக்கர் என்ற பெயரில் ஆவல்நத்தம் கிராமத்தில் ஒரு நபரே அப்படி கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பிசாஆ.30 ஆவணத்தில் அய்யப்பன் என்று கையெழுத்திடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அய்யப்பநாயக்கர் அய்யப்பன் என்று தான் கையெழுத்திடுவார். நான் என்னுடைய எதிர்வழக்குரையில் சொத்து காமாட்சிசெட்டியார் என்பவருக்கு பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி காமாட்சிசெட்டியாரிடமிருந்து சுப்பாநாயக்கர் வாய்மொழியாக கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சுப்பாநாயக்கர் இறந்தபிறகு அவரது வாரிசு என்றுகூறப்படும் 13ம் பிரதிவாதிக்கு சொத்து வாரிசு முறையில் கிடைத்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். காமாட்சிசெட்டியார் சொத்துக்களை அனுபவித்து வந்ததற்கு நான் ஆவணங்கள் எவையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி சுப்பாநாயக்கர் பெயரில் நான் ஆவணங்கள் எவையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்தவெளி நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R. ரத்தினவேல் பாண்டியன்

சார்பு நீதிபதி,

கோவில்பட்டி.